Registered as a Newspaper

கலை அழகுமிக்க கண்கவர்
22 KT தங்க நகைகளை
நம்பிக்கை,
உத்தரவாதத்துடன்
ஆடர்செய்து
பெற்றுக்கொள்ள என்றும்
நினைவிலிருக்க வேண்டிய
ஸ்தாபனம்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வனமிகு வனிதையரின்
வனப்புமிகு மேனிக்கு
எழிலூட்டும்
22 KT தங்க
நகைகளுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
போன்: 23682

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆவணி மீ 18 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 27 (03-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 245

# போராளிகளிடம் 'சாம்' ஏவுகணைகள்!

## வெளிநாட்டு பத்திரிகையாளருக்கு இராணுவ உயர் அதிகாரி இப்படித் தகவல்

கொழும்பு, செப்டெம்பர். 3

தமிழ்ப்போராளிகளிடம் தரையில் இருந்து வானத்துக்கு ஏவப்படும் ஏவுகணைகள் உள்ளன. அவை 'சாம்' ரகத்தைச் சேர்ந்தவை. பிரிட்டிஷ்தயாரிப்புகளாகும்.

இப்படி வடபகுதி இராணுவ உயர் அதிகாரி ஒருவர் வெளிநாட்டுச் செய்திஸ்தாபனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்தது.

பலாலி, யாழ் கோட்டை முகாம்களுக்கு விஜயம் செய்த இக்குழு வடபகுதி இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

அச்சமயமே உயர் இராணுவ அதிகாரி ஒருவர் போராளிகளிடம் விமானங்களைத் தாக்கக்கூடிய சாம் ஏவுகணைகள் உள்ளன என்ற தகவலை வெளியிட்டார். (அ-எ)

## இன்று நல்லூரில்

மகோற்சவம்

25ஆம் திருவிழா-தீர்த்தம்

காலை 7 மணிக்கு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி ஆலயகேணியில் தீர்த்த விழா.

மாலை 4.30 மணிக்கு கொடியிறக்கப்பெற்று 5 மணியளவில் வீதிவலம். தொடர்ந்து சண்டேசுவரர் உற்சவம் நடைபெறும்.

மாலை 3 மணிக்கு தலை ஆதீனத்தில் நடைபெறும் தொடர் சொற்பொழிவில் "இன்பமே சூழ்க" என்ற பொருளில் ஆத்மஜோதி நா. முத்தையா சொற்பெருக்காற்றுவார்.

மாலை 6.15 மணிக்கு நாவலர் மணிமண்டபவளவில் செல்வி. யோகாம்பிகை செல்லையாபிள்ளை, செல்வி நாகம்மா கதிர்காமர் தெய்விகத் தமிழிசை வழங்குவார்கள்.

மாலை 6.30 மணிக்கு மேற்குவீதியிலுள்ள பிள்ளையார் கோவில் மண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - சிப்பாய்கள் மன்னாரில் 3 மணிநேரம் மோதல்

யாழ்ப்பாணம், செப். 3

மன்னாரில் இருந்து தாழ்வுபாடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிப்பாய்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று மூன்று மணி நேரம் மோதல் நடத்தினர். எழுந்தூர் என்னும் இடத்தில் இச்சம்பவம் நடந்தது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. கடைகள் இழுத்து மூடப்பட்டன.

சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

நேற்றுக்காலை 9 மணியளவில் மன்னார் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடைபவனியாகவும், துருப்புக்காவும் மூன்று "வப்பலோ" கவச வண்டிகளிலும், வேறு பல கவச வண்டிகளிலும் புறப்பட்டு வந்த இராணுவத்தினரை எழுத்தூராக்கும் தாழ்வுப்பாடு என்னும் இடத்திற்கிடையில் வைத்து எமது வீரர்கள் தாக்கினர். ஆர். பி. ஜி. கொண்டு தாக்கியதில் ஒரு "வப்பலோ" கவச வண்டி சின்னாபின்னமாக்கப்பட்டு முற்றாகச் சிதறியது.

இன்னுமொரு "வப்பலோ" பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. இராணுவத்தினரின் இழப்புக்களைப் பற்றிய விபரம் தெரியவில்லை. எமது தரப்பில் எதுவித இழப்புமில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## எம். ஜி. ஆர் புதுடில்லி பயணமானார்

சென்னை, செப். 3

தமிழக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் இன்று புதுடில்லியில் இருந்து அமெரிக்கா பயணமாகிறார்.

இதற்காக நேற்று சென்னையில் இருந்து புதுடில்லிக்கு திரு இராமச்சந்திரன் விமானம் மூலம் சென்றார். (இ-ா)

## நல்லையில் தேர் காண இம்முறை அதிக கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.3

நல்லூர்க் கந்தன் நேற்றுத் தேரில் உலா வந்த காட்சியை லட்சக்கணக்கான பக்தர்கள் கண்டு பக்திப் பரவசமடைந்தனர்.

நல்லைக் கந்தனின் நல்விழாப் பொலிவு காண நாலாபக்கமும் இருந்து அடியார் கூட்டம் நிரம்பி வழிந்தது. தேர்த் திருவிழா சிறப்புடன் நடந்தேறியது

ஜன சமுத்திரத்தின் நடுவே வெள்ளி ஓடம் மிளிர்ந்தாற் போல் ஆறுமுகப் பெருமான் ரதத்தில் ஆரோகணிப்பதற்கு அசைந்தாடி வந்த காட்சி அற்புதமாயிருந்தது.

அரோஹரா கோஷம் ஒருபுறம். முருகன்புகழ் பாடும் பஜனை கோஷ்டிகள் ஒரு புறம். ஆனந்தமாக அடியார் நடுவே ஐயன் ரதத்தில் ஆரோகணித்து இவர்ந்து வந்த காட்சி காணக் கண் கோடி வேண்டும்.

தேர் இருப்புக்கு வந்ததும் முருகனுக்குப் பச்சை சாத்தப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. பின்பு ரதத்திலிருந்து இறங்கி ஆடி ஆடி ஆலயம் சென்றடைந்த காட்சி அருள் பொலிந்து இருந்தது.

1982 ஆம் ஆண்டின் பின்னர் இவ்வருடம் முந்திய வருடங்களை விட பெருந்திரளான பக்தர்கள் தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்தனர்.



அல்லல் தீர்க்கும் ஆறுமுகப் பெருமான் நல்லைக் கந்தன். தேறுதல் தரவே தேரேறி வந்து—சூர் மாமருயத் தொடு வேலவனுக பக்தர்கள் புடைசூழ பவனி வரும் காட்சியைப் படத்தில் காணலாம்

1982 ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் விழாவிற் கலந்து கொண்டமை காணக்கூடியதாக இருந்தது.

## சுபநேரம்

3—09—1986
புதன்கிழமை

சுபநேரம்:
4 35 முதல் 6 05 வரை
ராகுகாலம்:
12 05 முதல் 1 35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

## ஆகஸ்டில் 137 தமிழர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 3

ஆகஸ்ட் மாதத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் வெளி மாவட்டம் ஒன்றிலும் 137 தமிழர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக உயிரிழந்தவர்களின் எண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வயாவிளான் பாடசாலையில் நேற்று இராணுவம்

## போராளிகள் என நினைத்து நின்ற மக்கள் உண்மை புரிந்து ஓடியபோது சூடு!

— உதயன் பலாலிச் செய்தியாளர் —

பலாலி, செப்டம்பர் 3

கட்டடங்கள் தகர்க்கப்பட்ட வயாவிளான் மகாவித்தியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் இரண்டரை மணியளவில் இராணுவத்தினர் மீண்டும் வந்து சேர்ந்தனர்.

ஞாயிறு, திங்கட்கிழமைகளில் தகர்க்கப்பட்ட கட்டடங்களின் உடைந்த பொருள்களை மக்கள் எடுத்துக் கொண்டிருந்த போது இராணுவத்தினர் அங்கு வந்து சேர்ந்தனர்.

போராளிகள் சீருடையில் வந்திருப்பதாக முதலில் நினைத்த மக்கள், பின்னர் உண்மை நிலையைப் புரிந்து கொண்டனர். நிலைமை புரிந்ததும் அவர்களில் சிலர் ஓட முயன்ற போது இராணுவத்தினர் அவர்கள் மீது சுட்டனர். சூடுபட்டவர்களில் சிலர் இறந்திருக்கலாம் என்றும் சிலர் காயமடைந்திருக்கலாம் என்றும் அஞ்சப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து மடத்தடி — குரும்பசிட்டி வழியாகவும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இருந்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பின்பக்க வழியாகவும் இராணுவத்தினர் மகா வித்தியாலயத்திற்கு வந்து சேர்ந்தனர்.

திங்கட்கிழமை மகா வித்தியாலயத்தில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட கட்டடத்தின் உடைந்த பொருள்களை மக்கள் எடுத்துக்கொண்டிருக்கும் போதே இராணுவத்தினர் திடீரென வந்து நுழைந்தனர்.

### உண்மை புரிந்தது

இராணுவம் சத்தம் மற்றும் ஆயுதங்களுடன் வருவதைக்கண்ட மக்கள் இராணுவ உடையுடன் போராளிகள் வருவதாக நினைத்து நின்ற போது அண்மையில் வந்த இராணுவம் சுட்டபோது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளேமோர் கண்ணி வெடி எப்படியானது? காயமடைந்த பொலிஸ் அதிகாரி தந்த தகவல்

கொழும்பு, செப். 3

தமிழ்ப் போராளிகள் ஆயுதப்படையினர் மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்தும் கிளேமோர் கண்ணி வெடி என்பது என்ன?

கிளேமோர் கண்ணி வெடித்தாக்குதலில் சிக்கி மயிரிழையில் உயிர்தப்பிய பொலீஸ் அதிகாரி ஒருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைத்து செய்தியாளரிடம் சொன்னதாவது:

ஸ்கொட்லாந்து நாட்டுக யுத்தத்தில் பயன்படுத்தி வந்த வாள் இருபக்கமும் கூரானது. அதன் பெயர் கிளேமோர். அந்தப் பெயரைக் கொண்டது தான் கிளேமோர் கண்ணி வெடி.

இராணுவ கண்ணி வெடி இது. கண்ணி வெடிக்குள் வெடி மருந்துகளும் ஆயிரக்கணக்கான சன்னங்களும் ஆணிகளும் நிரப்பப்பட்டு இருக்கும்.

இந்தரகக் கண்ணிகள் புல்மோட்டையில் மூன்று மரங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

பொலிஸாரின் தண்ணீர் பௌஸர் அந்த இடத்துக்கு வந்ததும் கண்ணிகள் வெடித்தன. காதைச் செவிடாக்கும் சத்தமும் கண்ணைக் குருடாக்க

(4 ம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் இத்தாலிய செய்தியாளர் இருவர் கைதாகி விடுதலை

கல்முனை, செப் 3

இத்தாலி நாட்டைச் சேர்ந்த இரண்டு செய்தியாளர்கள் கல்முனையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டுமே விஜயம் செய்யக்கூடியதான அனுமதிப் பத்திரங்கள் மட்டுமே இச்செய்தியாளர்களிடம் இருந்தன.

அம்பாறை மாவட்டத்துக்குச் செல்வதற்கான அனுமதியை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

இதுவே அச்செய்தியாளர் கைது செய்யப்பட்டதுக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட சமயம் செய்தியாளர்களுடன் கிறிஸ்தவ மதகுரு ஒருவரும் இருந்தார் மதகுரு ஜீப்பில் ஏற மறுத்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களும் ஏற முதலில் மறுத்து சொல்லி

(4ஆம் பக்கம் பார்க்க)

### தீவிரவாதிகளுக்கு எதிரான

# இறுதித் தாக்குதலுக்கு அரசு திட்டம் வகுக்கிறது

## அத்துலத் முதலி கூறுகிறார்

கொழும்பு, செப். 3

தீவிரவாதிகளுக்கு எதிரான இறுதித் தாக்குதல் நடத்த அரசு திட்டம் வகுத்து வருவதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அறிவித்திருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹலியாப்பிட்டியில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் லலித் அத்துலத் முதலி இத்தகவலை வெளியிட்டார்.

அரசு—கூட்டணிப் பேச்சுக்களின் பின்னர் அமைச்சர் அத்துலத் முதலி தீவிரவாதிகள் மீதான தாக்குதல் பற்றி பேசியுள்ளது இதுவே முதல் தடவை.

அக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் தீவிரவாதிகள் மீதான இறுதித் தாக்குதலை நடத்தும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். (இ-ஐ-எ)

## 3தாலிக்கொடி 9 சங்கிலிகள் நல்லூரில் திருட்டு

யாழ்ப்பாணம், செப்.3

நல்லூர்த் தேர்த் திருவிழாவின் போது 3 தாலிக் கொடிகள் 9 தங்கச்சங்கிலிகள் களவாடப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (அ-எ-10)

### கல்முனைக்கு

## அதிரடிப்படையா? இராணுவமா? பிரச்சினை சூடுபிடிக்கிறது

கல்முனை, செப். 3

கல்முனைக் கலவரத்தை அடக்க அதிரடிப் பொலிஸ் படையைப் பயன்படுத்த வேண்டும் என்ற பிரச்சினை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இதனிடையில் அதிரடிப் பொலிஸ் படை பயன்படுத்தப்படலாம் என்ற அச்சத்தில் தமிழ்மக்கள் இடம் பெயரத் தொடங்கியிருக்கிறார்கள்.

கலவரத்தை அடக்க அதிரடிப்பொலிஸ் படையை கொண்டு வருமாறு முஸ்லிம் பிரமுகர்கள், முஸ்லிம் அமைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை ரோந்துக்கு உத்தரவு

கொழும்பு, செப். 3

கல்முனையில் நேற்று மாலை தொடக்கம் அதிரடிப் பொலிஸ் படையினர் ரோந்து புரிந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



எங்கட தம்பி மாற்றை பலத்தை சரியா எடை போடவும் கலைக்கு இப்ப தெரியுது பின்னே!

## மீண்டும் நிலைகொள்ள மேலிடம் உத்தரவு!

கொழும்பு, செப். 3

கைவிடப்பட்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் மீண்டும் முகாம் அமைத்து நிலை கொள்ளும்படி வடபகுதி இராணுவத்துக்கு நேற்று உத்தரவிடப்பட்டிருந்தது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில் நடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயக் கட்டடங்களைத் தீவிரவாதிகள் தகர்த்துவிட்ட சம்பவம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது

கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் ரணதுங்கவுடன் ஜனாதிபதி 30 நிமிட நேரம் வரை இது பற்றி ஆராய்ந்தார்.

இதைத் தொடர்ந்தே, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் முகாம் அமைத்து நிலை கொள்ளும்படி வடபகுதி இராணுவத்துக்கு உத்தரவிடுவது என்று பாதுகாப்புச் சபை தீர்மானித்தது. (அ-ஐ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இயற்கையாகவே மனம் அலைமதிவதிறது. ஆகவே, மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்கு முன், ஒருவன் மூச்சைக் கட்டுப்படுத்தித் தியானம் செய்யலாம். அது மனத்தை ஒரு நிலைப்படுத்த உதவுகின்றது.

— அன்னை சாரதாதேவி


# உதயன்

உண்மை - நேர்மை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி 24805, 22073    03-09-86    த.பெ. 23


## லொறிக் கொள்ளை ஏன்?

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நகரத்தில் பூரண கடை அடைப்பு நடக்கும் என எச்சரிக்கப்பட்டிருக்கிறது. அன்று தொடக்கம் நெடுந்தூர லொறி சேவையும் நடைபெறாது.

இந்த எச்சரிக்கையையும், அறிவித்தலையும் மூன்று சங்கங்கள் கூட்டாக விடுத்திருக்கின்றன. யாழ் முஸ்லிம் லொறிப் போக்குவரத்து ஒன்றியம், யாழ் லொறிப் போக்குவரத்துச் சங்கம், யாழ் வர்த்தகர் சங்கம் ஆகியனவே சம்பந்தப்பட்ட மூன்று சங்கங்களுமாகும்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பாவனைப் பொருள்களை ஏற்றிவரும் லொறிகள் இப்போது அடிக்கடி கடத்தப்படுகின்றன; கொள்ளை இடப்படுகின்றன.

அந்த வரிசையில் ஆகக் கடைசியாக கடந்த மாதம் 27 ஆம் திகதியும் யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறி ஒன்று விசுவமடுவுக்கு அண்மையில் வைத்துக் கொள்ளையிடப்பட்டது.

தமிழ் மண்ணில் வைத்து யாழ்ப்பாணம் வரும் லொறிகள் கொள்ளையிடப்படுவது குறித்து மனித இயக்கங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. எனினும் லொறிக் கொள்ளைகள் அடிக்கடி நடக்கின்றன.

தொடர்ந்து நடக்கும் லொறிக் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்த விடுதலை அமைப்புகள் கவனம் எடுக்க வேண்டும் என்பதனை வற்புறுத்தும் விதத்திலேயே கடை அடைப்பும், லொறிச் சேவை நிறுத்தமும் நடக்க இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இப்போது கொள்ளைகள் அதிகம். அது குறித்து இப்பத்தியில் அடிக்கடி எழுதி வருகிறோம். அண்மையிலும் 17-8-1986 ஆம் திகதி அது குறித்து எழுதி இருந்தோம்.

எவராலும் கட்டுப்படுத்த முடியாத அரக்கனாக் கொள்ளை உருவெடுத்திருக்கிறது. சிவில் நிர்வாகம் குன்றியுள்ள இவ்வேளையில் அது குடாநாட்டு மக்களையும் ஏனைய தமிழ்ப்பகுதி மக்களையும் படாதபாடு படுத்துகிறது.

கொள்ளை அரக்கனின் மற்றொரு வடிவம் தான் லொறிகள் தமிழ்மண்ணில் வைத்துச் சூறையாடப்படுதல் – அதுவும் வெளிமாவட்டங்களிலிருந்து தமிழ்ப் பகுதிக்கு பாவனைப் பொருள்களை ஏற்றிவரும் லொறிகள் சூறையாடப்படுகின்றன. இது கண்டிக்கப்பட வேண்டியது; தடுக்கப்பட வேண்டியது.

தமிழ்ப் பகுதிகள், உணவு, உடை உட்பட ஏனைய பாவனைப் பொருள்களில் இன்னமும் சுயதேவையைப் பூர்த்தி செய்யவில்லை. அதனை கவனத்தில் கொள்ள வேண்டியது கட்டாயம்.

வெளிமாவட்டப் பொருள்கள் எமக்குத் தேவையில்லை என்று கூறும் காலம் இன்னும் வரவில்லை. அந்த அளவுக்கு எமது பொருளாதாரம் திட்டமிடப்படவும் இல்லை; பலாபலன்களும் கிடைக்கவில்லை.

ஆகையால், வெளிமாவட்டங்களில் இருந்து பொருள்களைத் தமிழ்ப் பகுதிகளுக்குக் கொண்டுவரத் தேவையில்லை என்று எவரும் வீண் வாதம் பேசமுடியாது. அதே போல தமிழ்ப்பகுதிகளுக்கு வரும் லொறிகளைச் சூறையாடுவது சரி என்று எவரும் குதர்க்க நியாயமும் பேசமுடியாது.

தமிழ்ப்பகுதிகளுக்கு பொருள்களை ஏற்றி வரும் லொறிகளைக் கொள்ளையடிப்பதை நிதான புத்தி உள்ள எவரும் ஆதரிக்க முடியாது; அதற்கு அனுமதிக்கவும் முடியாது.

கொள்ளைகள் காரணமாக நெடுந்தூர லொறிச் சேவைகள் ஸ்தம்பிக்குமானால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் மக்கள்தான். உணவுத் தட்டுப்பாடும், விலையேற்றமும் மக்களை ஓங்கி உதைத்து வாட்டும். மக்கள் பட்டினியாகச் சாகவும் நேரிடலாம்.

அந்த நிலைமை நினைத்தும் பார்க்க முடியாதது. எனவே வெளிமாவட்ட — தமிழ் மாவட்ட லொறிச் சேவை தடைப்படவோ சீர்குலையவோ இடந்தரலாகாது. தமிழ் மக்களின் நலனில் அக்கறை உடைய சகலரினதும் பொறுப்பு இதுவாகும்.

அரச படைகள் நடத்தி வரும் அடாவடித்தனங்களின் மத்தியில் கொள்ளைக்காரரைக் கண்டு பிடிப்பது, தண்டிப்பது, பொருள்களை மீள எடுப்பது என்பதெல்லாம் சாதாரண அமைப்புகளால் முடியாத காரியம். விடுதலை அமைப்புகள் தான் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

விடுதலை இயக்கங்கள் தமது முக்கிய பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருப்பது மக்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் மக்களின் வயிற்றிலடிக்கக் கூடிய அடாத்துகள் நடக்காமல் கண்காணிக்கும் பொறுப்பும் இப்போது அநேகமாக அவற்றையே சார்ந்து வருகின்றது.

## தென் ஆபிரிக்காவை சூழ உள்ள நாடுகளுக்கு விசேஷ நிதியம்

ஹராரே, செப் 2

தென் ஆபிரிக்காவைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு உதவ விசேட நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அணிசேரா நாடுகள் திட்டமிட்டுள்ளன.

தென் ஆபிரிக்காவைச் சுற்றியுள்ள நாடுகள் வெவ்வேறு வழிகளில் பொருளாதார ரீதியாக அதன் உதவியில் தங்கியுள்ளன.

இனஒதுக்கலைக் கடைப்பிடிக்கும் தென் ஆபிரிக்காவிற்கு எதிராக இந்நாடுகள் தடைகளைக் கொண்டுவரும் பொழுது பிரிட்டோரிய அரசாங்கம் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அஞ்சப்படுகின்றது.

இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை ஈடு செய்வதற்காகவே நிதியம் ஒன்றை ஏற்படுத்தி ஆபிரிக்க நாடுகளுக்கு உதவ அணிசேரா நாடுகள் திட்டமிட்டுள்ளன. (ஓ)

## சட்டவிரோதமாக பதுக்கிய ஆயுதங்கள் பிடிபட்டன

ஸான்டியாகோ, செப் 2

சிலி தேசத்தின் வடபகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் சட்டவிரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பலர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது இராணுவ நீதிமன்றம் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளும்.

ஒருகோடி அமெரிக்க டாலர் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என சிலி அரசு அறிவித்துள்ளது.

இவ் ஆயுதங்களை ரஷ்யாவிலிருந்து அல்லது கியூபாவிலிருந்து மீன்பிடிக் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனவும் ஜெனரல் பினொஷேயின் ஆட்சியை எதிர்க்கும்கிளர்ச்சியாளர்கள் பயன்படுத்துவதற்காகவே கொண்டுவரப்பட்டன என்றும் அரசு மேலும் தெரிவித்தது. (ஓ)

## அமெரிக்கா முக்கிய பரிசோதனை நடத்தும்

வாஷிங்டன், செப். 2

'ஸ்டார் வார்ஸ்' என்று அழைக்கப்படும் விண்வெளி ஆயுத உற்பத்தித் திட்டத்தின் ஓர் அம்சமாக அடுத்த வாரத்தில் முக்கிய பரிசோதனை ஒன்றை அமெரிக்கா மேற்கொள்ளும்.

'டெல்டா' ரொக்கட் ஒன்று விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதாக கேப் கெனவரலிலுள்ள விண்வெளி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பயணத்தின் போது நடத்தப்படவிருக்கும் பரிசோதனைகள் இராணுவத்துறை சார்ந்தவை என்றும் அவைபற்றிய விபரங்கள் வெளியிடப்பட மாட்டா என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## போதைப்பொருள் எரிக்கப்பட்டது

மெக்சிக்கோ, செப் 3

மெக்சிக்கோவில் பல லட்சம் டாலர் பெறுமதியான போதைப் பொருள்கள் பிடிபட்டன.

இவை மெக்சிக்கோ பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் வைத்து தீ மூட்டி எரிக்கப்பட்டன. (இ)

## கப்பல் கப்டன் நாடு திரும்பினர்

பொன், செப் 2

அத்திலாந்திக் சமுத்திரத்தில் 152 தமிழர்களை விட்டுச் சென்ற கப்பலின் கப்டன் நேற்று ஜேர்மனிக்குத் திரும்பியுள்ளார்.

லாஸ்பாமஸ் துறைமுகத்திலிருந்து பூட் பின்டர் ஞாயிறு இரவு தமது சொந்த ஊரான மேற்கு ஜெர்மனிக்கு விமான மூலம் சென்றார்.

தமிழ் அகதிகளை ஏற்றிச் சென்றதாக கருதப்படும் 'ஓரியோ' என்ற கப்பலை ஸ்பெயின் அதிகாரிகள் துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளார்கள்.

மே. ஜெர்மனி பொலிஸார் கப்டன் பின்டலை சட்டவிரோதமாக அகதிகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டு விசாரணைக்கு உட்படுத்தவிருக்கின்றார்கள். (ஓ)

## விண்கலத்தை சீனு அனுப்பும்

பீகிங், செப் 2

இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் சீனு விண்வெளி ஓடமொன்றை அமைத்து விண்வெளிக்கு அனுப்பவிருக்கின்றது.

விண்வெளி வீரர்களைப் பயிற்றுவிப்பதற்கென ஐரோப்பாவிலோ அல்லது ஆசியாவிலோ இல்லாத அளவிற்கு பெரும் நிலையம் ஒன்றை சீனு ஏற்படுத்தியுள்ளது.

1972 ஆம் ஆண்டிலிருந்து 18 செய்மதிகளை சீனு விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. (ஓ)

## பாகிஸ்தானில் புதிய கட்சி

இஸ்லாமாபாத், செப் 2

பாகிஸ்தான் மக்கள் கட்சி இரண்டாக பிளவுபட்டது.

மக்கள் கட்சித் தலைவி செல்வி பெனாஸிர் பூட்டோவின் ஆதரவாளர்களாக இருந்து வந்த பலர் தற்பொழுது புதிதாக ஒரு கட்சியை உருவாக்கியுள்ளனர்.

குலாம் முஸ்தாபா ஜதோய் புதிய கட்சியின் தலைவராகப் பிரகடனம் செய்துள்ளார்.

புதிய கட்சிக்கு தேசிய மக்கள் கட்சி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. (ஓ)

## நிக்கரகுவா பலியானோர் தொகை 2,000

மனாகுவா, செப். 2

நிக்கரகுவாவின் வடபகுதியில் உள்ள இரண்டு மாகாணங்களில் கடந்த எட்டு மாதங்களாக நடைபெற்றுவரும் மோதல்களால் சுமார் 2 ஆயிரத்திற்கும் அதிகமான கிளர்ச்சியாளர்கள் கொலைப்பட்டனர்.

அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுள்ள கிளர்ச்சிவாதிகள் நிக்கரகுவாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் நாச வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் என்று அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது. (ஓ)

## வெளி உலகில்

### மக்கள் சந்தையில் குண்டு வெடிப்பு

தென் ஆபிரிக்க மக்கள் சந்தையொன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினல் 18 பேர் பலியானுர்கள்.

### சுவாப்போ பாகிஸ்தான் உறவு

சுவாப்போ எனப்படும் தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தின் ராஜதந்திர அலுவலகம் ஒன்றைப் பாகிஸ்தானில் அமைப்பதற்கு ஜனாதிபதி ஸியா உல் ஹக் அனுமதி வழங்கியுள்ளார்.

### அரசியல் கூட்டம் நடத்த உரிமை

பெரு நாட்டின் தலைநகரான லீமாவில் அடுத்த மாதம் மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் அரசியல் கூட்டங்களை நடத்தும் உரிமையை அரசு மீண்டும் வழங்கியுள்ளது. எனினும் இரவு நேர ஊரடங்கும், அவசரகாலச்சட்டமும் தொடர்ந்தும் இருக்கும்.

### கொள்ளைகளால் ஊரடங்கு உத்தரவு

வழிமுறைக் கொள்ளைகள் அதிகரித்து வருவதால் நைஜீரியா தலைநகரில் இரவு வேளைகளில் பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### இந்தியா முதலிடம்

பட்டைதீட்டப்பட்ட வைரங்களின் ஏற்றுமதி எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் பெற்றுள்ளது. இதனுல் 30 கோடி 80 லட்சம் ரூபா வருமானம் முதல் மூன்று மாதங்களில் இந்தியாவிற்குக் கிடைத்துள்ளது.

### பணத்தின் பெறுமதி குறைப்பு

ஆர்ஜென்டீனு அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் பணத்தின் பெறுமதியைக் குறைத்துள்ளது.

### சர்வதேச இராணுவம்

திரிபோலி, செப் 2

அமெரிக்க ஜனாதிபதி றேகன் தனது பைத்தியகாரத்தனத்தை மாற்ற வேண்டும். இல்லாவிடின் சர்வதேச ராணுவம் ஒன்றை லிபியா உருவாக்கும்.

இவ்வாறு லிபியா தலைவர் கேணல் கடாபி தெரிவித்தார்.

லிபியாவிற்கு வெளியே வாழும் ஆயிரம் லிபியர்கள் மற்றும் லத்தீன் அமெரிக்கா, தென்ஆசிய ஆபிரிக்கா ஆகியநாடுகளின் போராளிகளைச் சேர்த்து அமெரிக்காவிற்கு எதிராக சர்வதேச ராணுவம் ஒன்றை உருவாக்குவேன்.

தேவைப்பட்ட ரீதியில் லிபியாவை விட்டு வெளியேறி அந்த ராணுவத்துக்குத் தலைமைதாங்கி போராட்டத்தில் குதிக்கவும் தயார் என்றார் கடாபி.

### விமானங்கள் மோதின 77பேர் பலி

வாஷிங்டன், செப் 2

அமெரிக்காவில் மெக்ஸிகோ விமான மொன்றும் தனியார் விமானம் ஒன்றும் நடுவானில் மோதிக் கொண்டதால் 77 பேர் பலியாகினர்.

அமெரிக்காவில் தெற்கு கலிபோர்னியாவில் நடுவானில் இந்த விபத்து நடந்தது.

வானில் வெடித்துச் சிதறிய விமானத்தின் சிதைவுகளும், சடலங்களும் பரவி வீழ்ந்தன.

தீப்பிடித்த விமான சிதைவுகளின் பகுதிகளால் பல வீடுகளும் தீக்கிரையாகின. இதனுல் பலர் பலியாகினர்.

இந்த விமான விபத்தில் 45 பயணிகளும், ஆறு சிப்பந்திகளும் தனியார் விமானத்தில் இருவரும் பலியாகினர். (உ-ஓ)

[நல்லையில் சொற்பொழிவு]

## மிருகங்களின் குறிக்கோள்தான் மனிதனுக்கும் இருந்தால்அவன் வாழ்வு எவ்வாறு உயர்வது?

யாழ்ப்பாணம், செப் 3

விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு உண்பதும் உறங்குவதும் இனத்தைப் பெருக்குவதுமே குறிக்கோள். மனிதனுக்கும் இதுவேதான் குறிக்கோளானுல் மனித வாழ்க்கையில் எவ்வாறு உயர்வது.

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் நல்லை ஆதீனத்தில் 'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என்ற தலைப்பில் பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டார்.

கடந்த ஞாயிறு மாலை பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

மனிதனுக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. மாணவப் பருவத்தில் கல்வி, பின்னர் உத்தியோகம், அதன் பின்னர் இல்லறம். குழந்தைச் செல்வம் குறிக்கோளாக அமையலாம்!

இவை உயர்ந்த குறிக்கோளாக அமையாது. இறை தரிசனம் பெறுதலே உயர்ந்த குறிக்கோள். இக்குறிக்கோள் இல்லாத படியினுல் தான் கெட்டுப்போனதாக அப்பர் சுவாமிகள் கவலைப்பட்டார்.

மனிதவாழ்வு உயர்ந்த குறிக்கோளை நோக்கி அமையவேண்டும்.

இப்படி ஆத்மஜோதி முத்தையா சொன்னுர்.

கடந்த சனிக்கிழமை 'குருவாய் வருவாய்' என்ற தலைப்பில் ஆத்மஜோதி முத்தையா பேசினுர். (இ-எ)

## யாழ் மாவட்ட பாடசாலை ஆங்கில போட்டி

யாழ்ப்பாணம், செப் 3

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கிலப் போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

உருப்பெழுத்து, உச்சரிப்பு, கட்டுரை ஆக்கம், குழுப்பாடல் ஆகிய துறைகளில் நடைபெறும் இப்போட்டியில் பிரதம கல்வி அதிகாரி திரு ஆ. சோமசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம், வெளிக்கள ஆங்கில ஆலோசகர்கள் திருவாளர்கள் டி. ஆ. அருமைநாயகம், எஸ். தெய்வதவபாலன் ஆகியோர் இப்போட்டிகளை ஒழுங்கு செய்கின்றனர். (உ-9)



பொய்யாமொழி

குறள்:

பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

பொருள்:

அருள் இல்லாதவராய் அறமல்லாதவை களைச் செய்து நடப்பவர்களை உறுதிப் பொருளை [illegible] வாழ்க்கையின் குறிக்கோளை மறந்தவர் என்பர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உண்மையான இடதுசாரிக் கட்சி ஜே. வி. பி. தான் என்கிறார் சிறிமா

கொழும்பு, செப் 3

நாட்டிலுள்ள உண்மையான இடதுசாரிக்கட்சி ஜே. வி. பி. தான்.

இப்படி சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

ஜே. வி. பி. யைத் தடை செய்திருப்பது நீதி அற்ற செயல். இலங்கையை ஆக்கிரமிக்க வேண்டும் என்று கோரிவரும் கூட்டணி இன்னும் தடை செய்யப்படவில்லை.

பிரிவினையை ஜே. வி. பி. எதிர்க்கிறது. கூட்டணியோ தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பின் பின்தான் திரு. அமிர்தலிங்கம் அக்கறையாக இருக்கிறார். இணைப்புக் கிடைத்துவிட்டால் நாட்டின் ஏனைய பகுதிகளைத் தீவிரவாதிகள் பிடிப்பது இலகுவாகிவிடும்.

மாகாணசபையை ஏற்றால் 200 மைல் கடல் பிரதேசம் தீவிரவாதிகளின் கைகளுக்குள் வந்துவிடும்.

மகாவலித் திட்டத்தின் கீழ் வரும் காணிகளில் 99 சதவீதமான வற்றைத் தமிழர் பெறுவர்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னுர். (இ-எ)

## இசை நிகழ்ச்சி

மானிப்பாய், செப் 3

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமைகளில் அளவெட்டி கொலிசியூ அரங்கில் நடைபெற்று வரும் அரங்கிசை நிகழ்ச்சி இத்தொடரில் இம்மாதம் 6 ஆம் திகதி மாலை 4. 30 மணிக்கு திரு. பொன். சுந்தரலிங்கம் இன்னிசை வழங்குவார்.

கடந்த மே மாதம் முதல் இந்த அரங்கிசை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலை மாணவர்கள் கர்நாடக இசைத்துறையில் தேர்ச்சிபெறவும், ராகம், தானம் பல்லவி ஆகியவற்றை இசை ஞானிகள் நன்கு புரிந்து கொள்ளவும், இசைக் கலையை வளர்த்து இசை ஞானிகள் பயனடையவும் இவ்வரங்கிசை நிகழ்ச்சி பயன்படுவதாக இதன் அமைப்பாளரான ஆசிரியர் திரு கே. என். சிவானந்தராசா தெரிவித்தார். (இ - 90)

[நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்]

## நல்லை வேலவா துயர் களைந்திடுவாய்!

தீமை மிஞ்சிப் பலாத்காரம் தலையெடுத்த
தேவர்—நரர் சிறைப்பட்டனராய்த் தவித்து
ஆமைகளாய் ஐம்புலன்களொடுக்கி வாழ்வில்
அல்ல லுற்றுக் கண்களினீர் ஆறுபோல
வாமைகளாய் இறையொன்றே தஞ்சமென்று
உணர்ந்துரைக்க.. உலகத்தின் இருளை நீக்கும்
தேயமுறு வழியெதென்று சிந்திக்க
நெற்றிக் கண்ணுல் பொறியும் பறந்ததே
* * * *
ஞானக் கண்ணுல் விழு தீப் பொறிகளாறும்
நானிலத்தைப் பொசுக்குமென வுமைகாளஞ்சி
தேவமுதப் புனலாயும் கங்கை தனில்
சேரவிட.. அவை அங்கு வளர்ந்து செல்வ
ஞான நிறை குழந்தைகளாய் உருவந்தாங்கி
தல்ல சரவணப் பொய்கையிலே ஒன்றுகி
உலகம் உய்யவே வந்துதித்த நல்லை வேலவா
ஈழத்தமிழனின் இன்னலினை நீக்கிடமாட்டாயா?

—எஸ். கே. சண்முகநாதன்—

## சமய நிகழ்ச்சிகளில்

### அளம்பில்முருகன் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 3

முல்லைத்தீவு அளம்பில் திருமுருகபுரம் அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை கிரியாரம்பத்துடன் தொடங்குகின்றது.

நாளை வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதலும் மறுநாள் வெள்ளிக்கிழமை மகாகும்பாபிஷேகமும் இடம்பெறும்.

13 நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சிகள் 108 சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

கும்பாபிஷேக கிரியைகளை பிரம்மஸ்ரீ பத்மகுமாரக்குருக்கள் நடத்துவார்.

சண்முகசுந்தர சர்மா, விஜயபாஸ்கர சர்மா, ரவீந்திர சர்மா ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர். (ஓ)

### சிவபூதராயர் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 3

சுன்னுகம் தெற்கு அருள் மிகு சிவபூதராயர் ஆலய அலங்கார உற்சவங்கள் வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

வெள்ளி மாலை திருவூஞ்சல் இடம்பெறும். (ஓ)

### சொக்கர் வளவு திருவிழா பூர்த்தி

யாழ்ப்பாணம், செப் 3

குப்பிளான் சொக்கர் வளவு சோதிவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை பூர்த்தியாகின்றது. (ஓ)

## பிரதமரிடம் சிறிமா கேள்வி

கொழும்பு, செப், 3

மாகாண சபை யோசனை பற்றி சார்பான அல்லது எதிரான கருத்துக்களைத் தெரிவிக்க பிரதமர் பிரேமதாச முன்வருகிறார் இல்லை.

இதுபற்றி பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாரம்மலவில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். (உ-ஐ-எ)

★ வர்ணப் புகைப்படம் பிரதி ஒன்று ரூ. 5/-
★ Processing Free
★ விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628
அன்புடன் அழைக்கின்றது

# உதயன்

03–09–1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்

## கமரூனில் துக்கம் அனுஷ்டிப்பு

நச்சுவாயு காரணமாக கமரூனில் இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இறந்தோர் எண்ணிக்கை 1700 ஆக அதிகரித்துள்ளது.

பிரிட்டன் உட்பட பல ஐரோப்பிய நாடுகள் அவசர நிவாரண உதவிகளை அனுப்பி உள்ளன (இ)

## தொழிற் பயிற்சிகள்

விவசாயம், வெல்டிங் தொழிற் பயிற்சி. இடம் Y. T. C., பரந்தன். விபரங்களுக்கு 'சஞ்சீவி' ஆகஸ்ட் 30 பார்க்கவும்.

# ஆயுதப் படைகளின் கைகளில் தமிழ் மக்கள் சித்திரவதை

## நியூயோர்க் டைம்ஸ் செய்தி

நியூயோர்க், செப் 2

இலங்கை ஆயுதப்படையினரின் கைகளில் தமிழ் மக்கள் சித்திரவதை, மற்றும் கொடுமைக்கானாகி வருகின்றார்கள். காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 250 தமிழர்கள் காணாமல் போய் விட்டனர்.

இப்படி 'நியூயோர்க் டைம்ஸ்' நேற்றுச் செய்தி வெளியிட்டதாக பி. பி. ஸி செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இலங்கை பாதுகாப்புப் படையினர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை இலங்கை அரசு மறுக்கவில்லை.

3,000க்கு அதிகமான தமிழர்கள் பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடுப்புக்காவலில் இருக்கும் போது சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதாக கொழும்பிலிருந்தவரும் செய்திகள் கூறுகின்றன.

இப்படி 'நியூயோர்க் டைம்ஸ்' இதழில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டு உள்ளது. (இ-ஐ-எ)

## முஸ்லிம்களின் தனி மாகாண சபை எல்லைகள் குறித்து லீக் ஜனாதிபதிக்கு மகஜர்

கொழும்பு, செப் 3

கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு தனிமாகாண சபை அமைப்பு ஒன்று தேவை என்று அகில இலங்கை முஸ்லிம் லீக் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த மகஜரில் கேட்டுள்ளது.

மகஜரின்படி, உத்தேச முஸ்லிம் மாகாணசபை எல்லைக்குள் 80 சதவீதமான முஸ்லிம்கள் வாழ்வர்.

கிழக்கு மாகாணத்தின் மொத்த முஸ்லிம்கள் 3,17 000 ஆவர்.

இவர்களில் 3 லட்சம் பேர் முஸ்லிம் மாகாண சபை எல்லைக்குள் வசிப்பர்.

சுமார் 80,000 தமிழர், சுமார் 40 000 சிங்களவர் ஆகியோரும் முஸ்லிம் மாகாண எல்லைக்குள் வசிப்பர்.

கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தேர்தல் தொகுதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை ஓட்டமாவடி, திருமலை மாவட்டத்தில் உள்ள மூதூர், கிண்ணியா, தம்பலகமம் — ஆகிய பிரதேசங்களைக் கொண்ட முஸ்லிம் மாகாணசபை அமைய வேண்டும்.

இந்த யோசனைக்கு அிலா கிழக்கு மாகாண எம்பிக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இப்படி ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

## ஆகஸ்ட்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை வருமாறு;

மட்டக்களப்பு-43
திருகோணமலை-31
யாழ்ப்பாணம்-27
கிளிநொச்சி-18
வவுனியா-09
மன்னார்-08
அம்பாறை-03
முல்லைத்தீவு-01
ஏனையமாவட்டம்-03

## கல்முனையில்:--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டனர்.

அப்போது கடைப்படு வீரர்கள் என்று செய்தியாளர்கள் எச்சரிக்கப்பட்டனராம் உடனே செய்தியாளர்கள் இரண்டு பேரும் சட்டையைக் கழற்றி மார்பைக் காட்டி சுடுங்கள் என்று சவால் விட்டனர் என்று தெரிகிறது. (இ-எ-84)

## அதிரடிப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சகள் ஊடாக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

இராணுவத்தைப் பயன்படுத்தும்படி தமிழ்ப் பிரமுகர்கள் தமிழ் அமைச்சர்கள் மூலம் ஜனாதிபதிக்கு விண்ணப்பித்துள்ளனர்

பொலிஸ் அதிரடிப் படை வந்தால் மீண்டும் 1984 காரைதீவுக் கலவரம் போன்று ஒன்று உருவாகலாம் என்று அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

அமைச்சர் இராசதுரைக்கு கல்முனைத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சபைத் தலைவர் சட்டத்தரணி ஜி. குமாரலிங்கம் தொலைபேசி மூலம் இந்த அச்சத்தைத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் திரு. வேல்முருகு இது சம்பந்தமாக கூட்டணிப்பிரமுகர் டாக்டர். நீலன்திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டார். (இ-எ-84)

## வயாவிளான்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையைப் புரிந்து கொண்டனர்.

உண்மை நிலை தெரிந்த பலர் ஓடத் தொடங்கியதாகவும், வேறுசிலர் நின்றுவிட்டதாகவும் மயிரிழையில் தப்பி வந்த ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார் சுடப்பட்டவர்களில் ஒரு சிலர் இறந்திருக்கக் கூடும் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

சிலரை இராணுவத்தினர் கைதுசெய்து வைத்துள்ளனரெனவும் கூறப்படுகின்றது.

### ஆயுதங்களுடன் போராளிகள்

இது இவ்வாறிருக்க, வயாவிளான் மகா வித்தியாலயத்தைச் சுற்றவர வடக்குப் புன்னாலைக்கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் ஐம்பதிற்கும் மேற்பட்ட போராளிகள் மிக நவீன ரக ஆயுதங்களுடன் நின்றனர்.

இராணுவத்தினர் நிலைகொண்டு தங்கக் கூடியதும் இரகசிய 'செக்றி' நிற்பதுமான வயாவிளானின் உள்ள மூன்று கட்டடங்களை போராளிகள் நேற்றுக்காலை குண்டு வைத்துத் தகர்த்தனர்.

### ஷெல் ஏவல்

அதனைத் தொடர்ந்து பலாலி முகாமிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் குரும்பசிட்டி, வடக்குப் புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன

குரும்பசிட்டியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரின் வீட்டுக்குப் பக்கத்தில் விழுந்த ஷெல் அருகில் நின்ற திருமதி மகேஸ்வரி (40 வயது) என்பவரது காலிலும், கையிலும், முகத்திலும் படுகாயங்களை ஏற்படுத்தியது.

ஷெல்களால் மூன்று வீடுகள் பாதிக்கப்பட்டன

போராளி ஒருவரும் காயமடைந்தார்.

கடல் விமானம் (சீ-பிளேன்) உயர நின்று சுற்றிப் பார்த்தபடியிருந்தது.

ஹெலிகொப்டர்கள் உயரப் பறந்து சென்றனவே தவிர சுற்றிப் பறக்கவில்லை.

வயாவிளான் மத்தியமகா வித்தியாலய பகுதியில் வடக்குப் பக்கமாக பதுங்கியிருந்த இராணுவத்தினர் அவ்வழியால் போனவர்களுக்கு சுட்டார்கள். இதனால் வெ[illegible] (24 வயது) சி சுரேஸ்குமார் 17 வயது) என்ற 2 இளைஞர்கள் காலிலும், கையிலும் காயமுற்றனர்.

இதே வேளை பிந்திக் கிடைத்த செய்திகளின்படி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் எஞ்சியிருந்த கட்டடங்களையும் இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்று அறியவந்தது (அ-119)

## தாக்குதலில் சிப்பாய்கள் பலி

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செப் 3

குரும்பசிட்டியில் முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிப்பாய்கள் மீது மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தினர். இதில் நான்குக்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஈ பி ஆர். எல் எவ் நேற்று விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அறிக்கையின் விவரம் வருமாறு;

மக்கள் விடுதலைப் படையின் மோட்டோர் ஷெல் தாக்குதல்களாலும் சக இயக்க போராளிகளின் தாக்குதல்களினாலும் வயாவிளான் மகா வித்தியாலயத்தை விட்டு பின் வாங்கிய சிப்பாய்கள் குரும்பசிட்டியிலுள்ள தனியார் மருத்துவ மனை ஒன்றில் முகாமிட்டுள்ளனர் முகாமைப் பலப்படுத்தும் இவர்களின் முயற்சியை தடுக்க மக்கள் விடுதலைப் படையினர் மோட்டோர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலால் 4க்கும் மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் சிலர் படுகாயம் அடைந்தனர். இத மோதலில் மக்கள் விடுதலைப் படை வீரர் ஒருவரும் காயமடைந்தார்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ)

## தேவை-மின்தறி நெசவாளர்

மிக விரைவில் தொடங்கவிருக்கும் மின்தறி ஆலைக்கு முன் அனுபவமுள்ள நெசவாளர்களும் பொருத்துநர்களும் தேவை விரும்பியவர்கள் 1986-09-05க்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு;

ஆய்வு நிறுவனம்,
81/1,கே கே எஸ். வீதி கொக்குவில்.

## மேசன்மார் தேவை

யாழ்நகரிலுள்ள பிரபல பொறியியல் நிறுவனமொன்றுக்கு மேசன்மார் தேவை. கூடிய அனுபவமுள்ளோர் விரும்பப்படுவர். 9-9-86இன் முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண்: 32.
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

## லொறி உரிமையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

நெடுந்தூர லொறி சேவையை நிறுத்தி, தமக்கு ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்புத் தருமாறு யாழ். முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும், யாழ். வர்த்தகர் சங்கமும் எமக்கு அழைப்பு விடுத்துள்ளன.

அது குறித்துத் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு செய்வதற்கான முக்கிய கூட்டம் நாளை (4-9-86) வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறும்.

லொறி உரிமையாளர்கள் சகலரையும் இக்கூட்டத்திற்குச் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

வட பிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்கம்.

## தென் ஆபிரிக்கா ஓர் எரிமலை!

### தலைமைப் பதவி கையளிப்பு வைபவத்தில் ராஜீவ் உரை

ஹராரே, செப்.2

தென் ஆபிரிக்கா ஒரு எரிமலை. அங்கு பெரும்பான்மைக் கறுப்பின மக்களுக்கு சுதந்திரம் வழங்க மறுக்கப்பட்டால் பெரும் ரத்தக்களரி ஏற்படும்

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எச்சரித்தார்.

அணிசேரா இயக்கத்தின் தலைமைப்பதவியை சிம்பாப்வேப் பிரதமரிடம் கையளிக்கும் வைபவத்தில் பிரதமர் காந்தி பேசினார்.

1983 இல் இந்தியாவுக்கு இத்தலைமைப் பதவி கிடைத்தது. அப்போது தலைமைப் பதவியை ஏற்றவர் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவரின் மகன் பிரதமராக இருந்து நேற்று கையளித்தார்.

பிரதமர் காந்தி மேலும் சொன்னதாவது!

தென் ஆபிரிக்க பெரும்பான்மை இனமக்களுக்கு சுதந்திரம் கிடைப்பது நிச்சயம்.

அச் சுதந்திரம், அமைதியான முறையில் கொடுக்கப்படுமா? அல்லது பெரும் இரத்தக்களரியின் பின்னர் கொடுக்கப்படுமா? என்பதே இன்றுள்ள பிரச்சினை

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (இ-எ)

## இன்று---

பத்தில் திரு. வை நித்தியானந்த சர்மா அவர்களால் "சிங்கமுகாசுரன் போர்" என்ற பொருளில் கந்தபுராண தொடர் பிரசங்கம் நடைபெறும்.

## அதிரடி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்.

முஸ்லிம் எம்பிக்களின் வேண்டுகோளை ஏற்று கல்முனைப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அதிரடிப் பொலீஸ் படைக்கு ஜனாதிபதி நேற்று உத்தரவிட்டார். (அ-எ-1)

## இளேமோர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய மின்னலும் கண்ணிகள் வெடித்தவுடன் ஏற்பட்டன.

தண்ணீர் பௌஸர் தலைகுப்புறப் புரண்டது. ஒவ்வொரு வெடியின் போதும் 750க்கு அதிகமான சன்னங்கள் ஆணிகள் எம்மைத் தாக்கின.

இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் பற்றைகளுக்குள் பதுங்கி இருந்து இரு ரக ஆயுதங்களினால் தாக்குதலை நடத்தினர்.

அந்த தண்ணீர் பௌஸரில் 11 பொலீஸார் அன்று சென்று இருந்தனர்.

[illegible] (இ-எ)

## இன்று முதல்

# RSR Green Peking Palace

யாழ்நகரில் 4ஆம் குறுக்கு வீதியில் மக்கள் நலன்கருதி சேவை செய்ய முன்வந்துள்ளது.

## Green Peking Palace

அன்பான உபசரிப்புடன் குறைந்த விலையில் குளிர்பானங்களுடன் கூடிய
COFFEE SHOP, SNAK BAR (Tea, Coffee)
CHINESE உணவு வகை, SHORT EATS, ICE-CREAMS

உங்கள் வீட்டுக்குத் தேவையான Grosery, Fancy Goods இவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பை அளிக்க உங்கள் நலன்கருதி காலை 9 00 மணி முதல் இரவு 10.00 மணி வரை சேவை புரியக் காத்திருக்கின்றனர்.

யாழ்நகரிலேயே முதன் முதலாக உங்கள் இல்லங்களுக்கு உணவு வகைகளை எடுத்து வந்து நவீன முறையில் உங்கள் திருப்திக்கு ஏற்றவாறு சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

GREEN PEKING PALACE ஸ்தாபனத்தார்
Also Orders Undertaken-
CHICKEN BURIYANI Pkt. 25/-
-Lunch, Short-Eats, Cool Drinks, Ice Cream, Cakes-
For ★ Wedding Reception
★ Birthday Parties ★ Cocktail Parties
Etc:, Etc-, Etc., Etc.,
For More Information-
MANAGER.
PEKING PALACE,
No 69, G, 4th Cross Street, JAFFNA.

## பல்கலைக்கழக அனுமதிகள் (வெளிநிலை)

### கல்வியாண்டு 1987 / 88

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்ட நெறிகளான,

)( கலைமாணி
)( விஞ்ஞானமாணி(பௌதிக விஞ்ஞானம்)
)( சட்டமாணி )( வணிகமாணி

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அண்மையில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்;

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 6-09-1986
விரிவுரைகள்: 07-09-1986இல் ஆரம்பமாகின்றன.

மாணவர் கவனத்திற்கு: முதுகலைமாணி (M.A.), கலாநிதி Ph D.) பட்டம் பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே விரிவுரைகளை வழங்குகின்றனர்.

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி
(வெளிநிலைப் பரீட்சைகள் பகுதி)
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## டென்மார்க்

குறைந்த கட்டணத்தில் நம்பிக்கையுடன் பயணம் செய்ய, தொடர்பு கொள்வீர்!

### யாழ்.-கொழும்பு விமான சேவை

ஒழுங்காக நடைபெறுகிறது.
முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்க

எங்கள் சேவைகள்:

* எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
* துரிதமான பாஸ்போர், விசா, பொண்ட் ஒழுங்குகள்
* CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
* இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

## ரெலிபோன் - ரெலெக்ஸ்

துரிதமான சேவை
Open 24 Hours

## Mack Communications & Travels

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

dyn ads

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 03 - 09 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Numder QJ 60 N86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org